உ

கடவுள் துணை.

அஞ்ஞானவைரி

என்னும்

மெஞ்ஞானத்தங்கம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

கடவுள் துணை.

மெஞ்ஞானத்தங்கம்.

மெஞ்ஞானத்தங்கம் மேலானத்தங்கம்
அஞ்ஞானத்தங்கமெல்லாம் ஞானத்தங்கம்
அனித்தியமாகுமடி. க

தங்கத்திற்றங்கம் தனித்தங்கமொன்றிருக்க
பித்தளைத்தங்கத்திற்கு ஞானத்தங்கம்
பித்தாசைக் கொண்டாயடி. உ

பொன்னிலனேகம் பூஷணந்தானுகும்
தன்மைபோல்தெய்வமடி ஞானத்தங்கம்
தர்க்கமுதவாதடி. ங

சாஸ்திரவேதம் சகலமுந்தான்பேதம்
மூர்த்தியொருத்தனடி ஞானத்தங்கம்
முதல்வனவன்றானடி. ச

வேதமனேகம் வேடிக்கைதானுகும்
பேதமதில்நுழைந்தால் ஞானத்தங்கம்
பிறப்புக்கிடமாமடி. ஞ

ஆத்திச்சுவடி அதையேகடைப்பிடிநீ
வேத்துச்சுவடியெல்லாம் ஞானத்தங்கம்
விபரீதமாகுமடி. ட

அன்னைமுதற்றெய்வம் அப்பன்மருதெய்வம்
பின்னைகுருதெய்வமடி ஞானத்தங்கம்
பிடிவாதஞ்செய்வாயடி. ண

அண்டமும்மாயம் அகிலமுந்தான்மாயம்
பிண்டத்தில்வந்ததெல்லாம் ஞானத்தங்கம்
பொய்யாய்முடியுமுடி. ஜ

பிறப்புப்பிறப்பென்று பேசுமகிழ்வதெல்லாம்
இறக்குந் தொழிலுக்கல்லோ ஞானத்தங்கம்
எல்லாம் பிறந்தோமடி. கூ

எரும்புகடையானை யெண்பத்துநான்குவித
பிறப்பும்பிரமமடி ஞானத்தங்கம்
பேதமென்றெண்ணுதடி. கo

வேதபுராணம் விபரீதஞானம்
ஆதாரமில்லையடி ஞானத்தங்கம்
எல்லாம்மாராட்டமடி. கக

ஒன்றுக்குஒன்று உயர்ஞானம்சொன்னும்
கண்டுபிடிப்பதற்கு ஞானத்தங்கம்
கருத்திலடங்காதடி. கஉ

ஏட்டிலெழுதிவைத்த யெண்கோடிஞானமெல்லாம்
கூட்டுக்குதவாதடி ஞானத்தங்கம்
குருவருள்வேணுமடி. கஙூ

ஏட்டுக்கழகாக எழுதியஞானமெல்லாம்
பாட்டுக்கழகேயல்லால் ஞானத்தங்கம்
பசிதீராமாட்டாதடி. கச

சாஸ்திரங்கற்றும்உம் சமுசாரம்விட்டாலும்
சூஸ்திரங்காட்டுதற்கு ஞானத்தங்கம்
சுயகுருவேணுமடி. கடு

குருவில்லாஞானம் கோடிப்படித்தாலும்
வடிவில்லாப்பெண்ணதுபோல் ஞானத்தங்கம்
வாழ்க்கைக்குதவாதடி. கசு

எட்டாதவீண்கோலம் ஏதுக்கடிஜாலம்
அட்டாங்கயோக மெல்லாம் ஞானத்தங்கம்
அவத்தைக்குமூலமடி. கள

யோகநிலைகின்றும்உம் உண்மைநிலைகண்டாலும்
தேகநிலையாவதற்கு ஞானத்தங்கம்
சித்தநிலைவேணுமடி. கஅ

பேச்சையடக்காமல் பேரின்பஞ்சேராமல்
மூச்சையடக்கிக்கொண்டால் ஞானத்தங்கம்
முதலுக்கேமோசமடி. ககூ

எந்தநிலைகண்டாலும் ஈனநிலையற்றாலும்
சிந்தைகலங்கில்லாவிட்டால் ஞானத்தங்கம்
தெய்வநிலைகாணுதடி. உ0

மூச்சையடக்கி முழுகிக்கிடந்தாலும்
பேச்சுக்கிடந்தானடி ஞானத்தங்கம்
பலனென்றுமில்லையடி. உக

காற்றையடக்கி கண்மூடிக்கொண்டாலும்
கூற்றன்விடமாட்டானடி ஞானத்தங்கம்
குருவேஷமேதுக்கடி. உஉ

வாய்ஞானம்பேசுகிற வம்பர்கள்ஞானமெல்லாம்
பேய்ஞானமாகுமடி ஞானத்தங்கம்
பின்னென்றுமில்லையடி. உங

கல்வித்திறத்தால் கடைஞானம்சொன்னாலும்
சொல்லுக்குறுதியுண்டோ ஞானத்தங்கம்
சுகமொன்றுமில்லையடி. உச

உள்ளபடிஞானம் உண்மையுரைத்தாலும்
கள்ளஜெனங்களடி ஞானத்தங்கம்
கருத்தில்பொருந்தாதடி. உடி

வெரியர்குடியரைப்போல் விளையாடும்பிள்ளையைப்போல்
பெரியோர்கள்செய்கையடி ஞானத்தங்கம்
பாஷையும்வேறுமடி. உசு

காலமொருமூன்றும் கருத்திலுணர்ந்தாலும்
ஞாலத்திற்செல்லாரடி ஞானத்தங்கம்
நல்லோர்பெரியோரடி. உள

தலையைச்சிறைத்தாலும் சடையைவளர்த்தாலும்
நிலையிற்றரிக்காதவர் ஞானத்தங்கம்
நடைபிணமாகுமடி. உஅ

சாத்திரங்கற்றாலும் சதுர்வேதந்தீர்ந்தாலும்
சோத்திலடக்கமடி ஞானத்தங்கம்
சுயஞானியாகாரடி. உசு

வஞ்சம்பொருமை வலதுசொல்லாமை
கொஞ்சமில்லாதிருந்தால் ஞானத்தங்கம்
குருக்கள்கிடைப்பாரடி. ஈ0

கபடுபொய்சூது களவுபிடிவாது
அகடுயில்லாதிருந்தால் ஞானத்தங்கம்
ஆசான்கிடைப்பாரடி. ஈக

காற்றையடக்கும் கருதேடிக்கொண்டவர்கள்
சோற்றைவிரும்பாரடி ஞானத்தங்கம்
சுயஞானம்பேசாரடி. ஈஉ

செத்தும்சாகாதவர்போல் சித்துவிளையாடுகிற
மூத்தர்கிருபையிருந்தால் ஞானத்தங்கம்
மூத்திகிடைக்குமடி. ஈஈ

மாண்டவர்போலே மயக்கமதுகாட்டி
தாண்டவம்செய்வாரடி ஞானத்தங்கம்
தன்னையறிந்தோரடி. ஈச

தன்னையறிந்த தலைவரடிபிடித்தால்
என்னகுறைச்சலடி ஞானத்தங்கம்
எல்லாங்கைக்கூடுமடி. ஈஎ

சம்சாரத்தொல்லை சாதிப்பாராருமில்லை
அம்சமதுபோலிருந்து ஞானத்தங்கம்
அசையாமல்கேளடியோ. ஈசு

துக்கசமுசாரம் தொல்லையிதினேகம்
எக்காலமானாலுந்தான் ஞானத்தங்கம்
ஈடேரமாட்டாயடி. ஈஎ

ஆண்டிகள்சன்யாசி அழகுப்பரதேசி
பூண்டகாஷாயமெல்லாம் ஞானத்தங்கம்
பொதிச்சுமையாகுமடி. ஈஅ

காலமகுத்துவத்தால் கஞ்சிகிடைக்காமல்
கோலமெடுத்தாரடி ஞானத்தங்கம்
குருவேஷங்கொண்டாரடி. ௫௯

குடியர்வெரியர் குடும்பநிலையில்லாதோர்
தடியர்மடையரெல்லாம் ஞானத்தங்கம்
சன்னியாசியானாரடி. ச0

பெண்டுமரித்தோர்கள் பிழைக்கவடிகாணுதோர்
சண்டையில்வீடுவிட்டோர் ஞானத்தங்கம்
சாமியாரானாரடி. சக

கல்வியறிவில்லாதோர் கைத்தொழிலிற்றேராதோர்
மெல்லமெல்லசாமியென்று ஞானத்தங்கம்
மின்முடிவளர்த்தாரடி. சஉ

கொஞ்சம்பொருளிருந்தால் குடும்பத்தையேன்விடுவார்
பஞ்சம்பிழைப்பதற்கு ஞானத்தங்கம்
பரதேசியானாரடி. சங

சோம்பலுடையோரும் சூதாடும்வம்பர்களும்
சாம்பசிவன்போலவே ஞானத்தங்கம்
சடையைவளர்த்தாரடி. சச

சடையைவளர்த்தவரும் தலைமொட்டையானவரும்
கோடிபேர்கூடினாலும் ஞானத்தங்கம்
குருவில்லாசிஷ்யரடி. சஞ

கட்டைதடியர்களும் கஞ்சாக்குடியர்களும்
மொட்டையடித்துக்கொண்டு ஞானத்தங்கம்
மூழுச்சாமியானாரடி. சசு

ஆடித்திரிந்தவரும் அக்கிரமம்செய்தவரும்
பேடிப்பயல்களெல்லாம் ஞானத்தங்கம்
பெருஞ்சாமியானாரடி. சள

சொல்லுங்குருக்களெல்லாம் சோற்றுக்கிடங்கொடுத்தால்
பல்லைத்திறப்பாரடி ஞானத்தங்கம்
பசையொன்றுமில்லையடி. சஅ

கோமண ஆண்டிகள் கோடாகோடிப்புவியில்
காபணம்காட்டிவிட்டால் ஞானத்தங்கம்
கலிஞானம்சொல்வாரடி. சக

கானகமும்மற்ற கடலேழ்கடந்தாலும்
ஞானிக்கிடையாதடி ஞானத்தங்கம்
நமக்கேன்கெருவமடி. நிம

கக்கத்தில்வேதம் கட்டிச்சுமந்தாலும்
அக்கரைச்சேருவது ஞானத்தங்கம்
அருமைதானுகுமடி. நிக

பாதக்குறடும் பலமானதாழ்வடமும்
காதிற்கவசமெல்லாம் ஞானத்தங்கம்
கடைவழிகாட்டாதடி.. நிஉ

காஷாயவஸ்திரமும் கையில்பிருதுகளும்
வேஷாதியுள்ளதெல்லாம் ஞானத்தங்கம்
வீண்பிலிக்காகுமடி. நிங

பூசுவதும் பூணுவதும் பூசணிகள்செய்வதுவும்
பேசுவதும்வசுவதும் ஞானத்தங்கம்
பேரின்பந்தாராதடி. நிச

ஆடுவதும்பாடுவதும் ஆளடிமைக்கொள்ளுவதும்
ஓடுவதும்தேடுவதும் ஞானத்தங்கம்
ஒருஜாண்வயிற்றுக்கடி. நிஞ

வல்லாளகண்டனென்று வாய்மதம்பேசுவதும்
இல்லாதையுண்டென்பதும் ஞானத்தங்கம்
எண்ஜாணுடம்புக்கடி. நிசு

வீண்கோலங்காட்டி வெருத்தாரைப்போல்நீட்டி
ஆண்கோலங்கொண்டதினுல் ஞானத்தங்கம்
ஆனபலனென்னடி. நிள

குருவையறியாமல் குருதொட்டுக்காட்டாமல்
கருவையறிந்தவர்போல் ஞானத்தங்கம்
கண்கெட்டுநின்றூரடி. நிஅ

புண்பட்டநெஞ்சரெல்லாம் புகைசெய்துபாஷாணம்
கண்கெட்டுப் போனவர்கள் ஞானத்தங்கம்
கண்க்கிலடங்காதடி. ௫

புல்லியுண்டாக்குதற்கு புருஷனொருவனில்லை
வெள்ளியுண்டாக்குதற்கு ஞானத்தங்கம்
வெகுபேரலைவாரடி. ௬

கும்பியழுக்கெடுக்க கோடிக்கொருவனில்லை
செம்பிலழுக்கெடுக்க ஞானத்தங்கம்
ஜெகமேயலையுதடி. ௭

கண்கெட்டவாதியெல்லாம் கண்டவிடந்திரிவார்
பண்பட்டவாதியைத்தான் ஞானத்தங்கம்
பார்க்கமுடியாதடி. ௮

வாதியரைப்புளுகன் மாந்திரிமுக்காற்புளுகன்
சோதிடம்சொல்பவன்முன் ஞானத்தங்கம்
சுத்தப்புளுகனடி. ௯

பூசாலியும்புளுகன் புலவன்பெரும்புளுகன்
ஆச்சாரியென்பவன்முன் ஞானத்தங்கம்
அண்டப்புளுகனடி. ௰

கூப்பிட்டழைக்குமுன்னே கூத்தாடும்தெய்வமெல்லா
காப்பாற்றமாட்டாதென்று ஞானத்தங்கம்
கருத்தில்நினைப்பாயடி. ௰௧

உடுக்கையடிக்குமுன்னே ஓடிவருந்தேவதைகள்
இடுக்கணகற்றுதடி ஞானத்தங்கம்
எல்லாம்வயற்றுக்கடி. ௰௨

போராடும்பேய்கள் பொல்லாதபேய்களடி
சாராயப்பேய்களெல்லாம் ஞானத்தங்கம்
சஞ்சலம்தீர்க்காதடி ௰௩

ஆலமரதேவதைகள் அரசமரதேவதைகள்
சாலிமரதெய்வமெல்லாம் ஞானத்தங்கம்
சஞ்சலம்தீர்க்காதடி. ௰௪

ஆடுபலிகேட்கும் ஐயன்பிடாரியெல்லாம்
கூடுவிட்டுப்போமுயிரை ஞானத்தங்கம்
கொண்டுவந்துதாராதடி. சுசு

தண்டுகமண்டலமும் தாவடமும்காவடியும்
கொண்டுசுமந்துவரும் ஞானத்தங்கம்
குடியரைநம்பாதடி. எo

பெரியோரடையாளம் பார்க்கநிலவ்ரமாம்
தெரியாமல்விட்டுவிட்டால் ஞானத்தங்கம்
திரும்பக்கிடைக்காரடி. எக

மூத்திகரைக்கு முந்தும்பெரியோர்கள்
சித்தம்நினைப்பதெல்லாம் ஞானத்தங்கம்
சிவமென்றிருப்பாரடி. எஉ

கண்ணிற்படும்பொருளே கடவுளென்றேநினைப்பார்
மண்ணிற்பெரியோரெல்லாம் ஞானத்தங்கம்
மனத்துக்கடக்கமடி. எஙு

மனத்தைப்பலிகொடுத்து மானத்தைச்சுட்டெறித்து
இனத்தைவெருத்துவிட்டு ஞானத்தங்கம்
ஏழைபோல்நிற்பாரடி. எச

குந்துவார்படுப்பார் குழந்தையைப்போல்கிடப்பார்
மந்திபோல்சேட்டைசெய்வார் ஞானத்தங்கம்
மகாத்துமாவாஞ்ரடி. எஞ

சொன்னதையேசொல்வார் சுர்ரென்றெழுந்திருப்பார்
பின்னும்விழித்திடுவார் ஞானத்தங்கம்
பெரியோரடையாளண்டி. எசு

விழிப்பார்கெரிப்பார்கள் வெட்டெனத்திட்டிடுவார்
பழித்தால்சிரித்திடுவார் ஞானத்தங்கம்
பரமமெஞ்ஞானியடி. எஎ

கூடியிருந்தாலும் கூப்பிட்டனைத்தாலும்
யாரையார்காண்பாரடி ஞானத்தங்கம்
யெல்லாம்பிரமமடி. எஅ

மனத்தையடக்க மாளாதனேகஜெனம்
இனத்தைப்பிரிந்தாரடி ஞானத்தங்கம்
ஏற்றக்கோலாகுமடி. ஏக

கடலிக்கடப்பனவும் கான்மலையிலேருவதும்
உடலவளர்ப்பதற்கே ஞானத்தங்கம்
உற்றுநினைப்பாயடி. அ0

கண்கட்டுமோடிகளும் கருவித்தைஜாலங்களும்
உண்ணுமுணவுக்கல்லால் ஞானத்தங்கம்
உயிர்த்துணையல்லவடி. அக

கயற்றில்நடப்பதுவும் கரடிப்புலிமிருகம்
பயிற்றிநடிப்பதுவும் ஞானத்தங்கம்
பசியின்கொடுமையடி. அஉ

ஊரூராயோடுவதும் உயர்ஞானம்பேசுவதும்
சோரும்துணிக்கேயல்லால் ஞானத்தங்கம்
சொர்க்கத்துக்கல்லவடி. அங

கூலிக்கிஞானம் கொட்டியளப்பவர்கள்
வேலிக்கிமுள்ளதுபோல் ஞானத்தங்கம்
விட்டுப்பிரியாரடி. அச

தன்னையறிந்தோர்கள் தலைவனைக்கண்டோர்கள்
உன்னைமதிக்காரடி ஞானத்தங்கம்
உலகத்தைவேண்டாரடி. அடு

தெய்வத்திருவழியே தேசவெளிச்சமென்று
மெஞ்ஞானம்சொல்லுவதால் ஞானத்தங்கம்
மெதுவாய்த்திரிவாயடி. அசு

ஈகர்வனஊர்வனவும் நடப்பனபறப்பனவும்
பகவான்விளையாட்டடி ஞானத்தங்கம்
பகையொன்றுமாகாதடி. அள

பூண்டுகள்தாபரமும் பெரியவிருஷமுதல்
ஆண்டவன்சிருஷ்டியடி ஞானத்தங்கம்
அழிப்பனவாகாதடி. அஅ

தொட்டகுறையுடனே துடியாகமுன்னிழைத்த
விட்டகுறையிருந்தால் ஞானத்தங்கம்
மெஞ்ஞானங்கிட்டுமடி. அசு

ஊழானவூழ்வினையை ஒழித்தமெஞ்ஞானிகளும்
பாழானப்பெண்ணாசையால் ஞானத்தங்கம்
பல்லோயிளிப்பாரடி. கூ0

சுடலைமெஞ்ஞானிமுதல் சுத்தமெஞ்ஞானிகளும்
விடலைப்பெண்கண்டுவிட்டால் ஞானத்தங்கம்
வேறெண்ணங்கொள்வாரடி. கூக

மெத்தநாள்யோகி மிகுஞானியானாலும்
சித்தினிப்பெண்ணைக்கண்டால் ஞானத்தங்கம்
சீலையவிழ்ப்பானடி. கூஉ

பெண்ணைத்துரந்தவர்கள் பூமியிலாருமில்லை
கண்ணன்கபாலிமுதல் ஞானத்தங்கம்
கட்டிச்சுமந்தாரடி. கூங

ஏரியிலேநீரிருந்தால் எவ்விடத்துப்பட்சிகளும்
சாரிவந்துசேர்வதுபோல் ஞானத்தங்கம்
சம்சாரவாழ்க்கையடி. கூச

பச்சைப்பசும்பிரிடத்தில் பட்சிமுதல்மாமிருகம்
இச்சைவைத்து சேர்வதுபோல் ஞானத்தங்கம்
எல்லாம்வருவாரடி. கூஞ

குணமில்லாவிட்டாலும் குலமில்லாவிட்டாலும்
பணமொன்றிருந்துவிட்டால் ஞானத்தங்கம்
பலபேருரவாமடி. கூசு

பணத்தைமதியாமல் பலயினம்செய்யாமல்
குணத்தோடிருந்துவிட்டால் ஞானத்தங்கம்
கிட்டேநெருங்காரடி. கூள

உலகம்பணத்தாலே உரவும்பணத்தாலே
கலகம்விளைவதெல்லாம் ஞானத்தங்கம்
காசுபெருக்காலடி. கூஷ

காசு இல்லாதொருவன் கடைத்தெருபோனலும்
பேசுவாரங்கேதடி ஞானத்தங்கம்
இது-பூலோகவாழ்க்கையடி. கூகூ

பிணத்தைச்சுடும்புலைய பஞ்சமரானலும்
பணத்தைத்திரந்துவிட்டால் ஞானத்தங்கம்
பழகாஞரவாமடி. கஂஂ

அடுத்தஉரவானலும் ஆடைகருத்திருந்தால்
தடுத்துநிருத்திடுவார் ஞானத்தங்கம்
காட்சண்யம்பாராரடி. கஂக

காணப்பயலேனும் காப்புகொனிருந்தால்
வேணவணக்கமுடன் ஞானத்தங்கம்
வேண்டியழைப்பாரடி. கஂஉ

அற்பசமுசாரம் அதற்குப்பலவிசாரம்
சொற்பமனிதரெல்லாம் ஞானத்தங்கம்
சொல்லிமகிழ்வாரடி. கஂகூ

சொற்பசமுசாரம் சொன்னல்பலவிசாரம்
அற்பமனிதரெல்லாம் ஞானத்தங்கம்
ஆற்றித்திரிவாரடி. கஂசு

ஆற்றுப்பெறுக்கதுபோல் அதிகவரவிருந்தால்
போற்றிப்பணிந்திடுவார் ஞானத்தங்கம்
பொருளுள்ளமட்டுமடி. கஂஞ

செல்வங்குறைந்துவிட்டால் சிலவுக்குக்காணட்டால்
இல்லாளுந்தூருசொல்வாள் ஞானத்தங்கம்
யாரும்மதியாரடி. கஂசு

பிள்ளைமதியாது பெற்றோருமேசிடுவார்
உள்ளசினேகிதரும் ஞானத்தங்கம்
ஒதிங்கிப்போய்நிற்பாரடி. கஂன

பணத்துக்கழுவார்கள் பலபொருளுக்கழுவார்
குணத்துக்கழுபவர்கள் ஞானத்தங்கம்
கோடிக்கொருத்தரடி. கஂஅ

செத்தப்பிணத்தருகே சாகும்பிணங்களெல்லாம்
சுத்தியழுவதென்ன ஞானத்தங்கம்
சூட்சமுரைப்பாயடி. கஙக

ஆனைக்குதிரைகளும் அதிகாரமேன்மைகளும்
சேனைசிப்பந்தியெல்லாம் ஞானத்தங்கம்
சாம்போதுதவாதடி. ககஙி

ஆஸ்தியும்பாஸ்திகளும் அழகானகட்டடமும்
ரிஸ்திதியானதெல்லாம் ஞானத்தங்கம்
பின்னேதுடராதடி. ககக

கொட்டிவைத்ததனமும் கோட்டைபோல்மாளிகையும்
பொட்டென்றுயிர்பிரிந்தால் ஞானத்தங்கம்
பின்னேதுடராதடி. ககஉ

இருக்குயசுர்சாமம் அதர்வணவேதமுதல்
திரக்கப்படித்தாலுமே ஞானத்தங்கம்
தீக்காயுரில்லையடி. ககங

தேடிவைத்தபொருளும் திரளானபந்துக்களும்
ஆடுமுயிர்போகையிலே ஞானத்தங்கம்
ஆறும்வரப்போரதில்லை. ககச

ஆகமவேதம் அறுகோடிசாஸ்திரமும்
ஓதுங்குருக்கள்கூட ஞானத்தங்கம்
ஓழியத்தான்வேணுமடி. ககஞ

பெண்டீரகத்துமட்டும் பிள்ளைசுடலைமட்டும்
கண்டஜனங்களெல்லாம் ஞானத்தங்கம்
கடைத்தெருமட்டுமடி ககசு

ஆண்டிப்பரதேசி யதிதிகள்யேழைகட்கு
வேண்டிக்கொடுத்ததெல்லாம் ஞானத்தங்கம்
விட்டுப்பிரியாதடி. ககள

செட்டுடன்வாழ்ந்தாலும் செங்கோல்பிடித்தாலும்
இட்டதருமமட்டும் ஞானத்தங்கம்
னன்றும்பிரியாதடி. ககஅ

தர்மம்அதர்மமென்று தாரணியிலேயிரண்டின்
மர்மம்தெரிந்துக்கொண்டால் ஞானத்தங்கம்
மாபுண்ணியவானுமடி. ககக

எள்ளளவானும் இல்லையென்றுசொல்லாமல்
கிள்ளிக்கொடுத்திருந்தால் ஞானத்தங்கம்
கூடத்துடருமடி. கஉ0

உன்பசியைப்போலே உலகத்தில்ஏழைகளின்
தன்பசிதீர்த்திருந்தால் ஞானத்தங்கம்
தனக்குதுணையாமடி. கஉக

செல்வப்பெருக்காலே சீமையிலேழைகளை
மல்லுக்கிழுக்காதடி ஞானத்தங்கம்
மாளாநரகமடி. கஉஉ

ஆதரவில்லாரை அடிமைகள்ஏழைகளை
வேதனைசெய்யாத்டி ஞானத்தங்கம்
வெகுமோசமாகுமடி. கஉஉ

சூதைவிரும்பாதே சூதாடப்போகாதே
பூதலமாண்டோரெல்லாம் ஞானத்தங்கம்
பரதேசியானாரடி. கஉச

நளச்சக்ரவர்த்தியுடன் நாடாண்டபுரூருவனும்
துலியாதசூதாடியே ஞானத்தங்கம்
துரும்பாயலைந்தாரடி. கஉஇ

தருமர்மனைவியுடன்தம்பிமார்நால்வர்களும்
கருமச்சூதாடியல்லோ ஞானத்தங்கம்
காட்டிலலைந்தாரடி. கஉசு

ஊற்றைச்சடலமிது உப்பிட்டபாண்டமடி
காற்றையடக்கிக்கொண்டால் ஞானத்தங்கம்
கற்பமிருப்பாயடி. கஉள

கண்ணின்முன்னுலே காஷ்டத்தின்மேலே
எண்ணிறந்தோர்களெல்லாம் ஞானத்தங்கம்
யெரியுண்டுபோனாரடி. கஉஅ

நீரா யெரிப்பதென்று நேராகப்பார்த்திருந்தும்
போராட்டமேதுக்கடி ஞானத்தங்கம்
போக்கிடம்வேறேதடி. கஉசு

பேய்க்கும்சிலஞானம் பிடிப்பட்டுதானிருக்கும்
நாய்க்குமோர்ஞானமுண்டு ஞானத்தங்கம்
நமக்கேன்கெருவமடி. கஉ0

உண்மையுரைப்போர்கள் உலகவிரோதியென்று
செம்மையாய்கேட்டிருந்தும் ஞானத்தங்கம்
ஜெகத்தில்தழையாதடி. கஉக

தவத்துக்கொருவரடி தமிழுக்கிருவரடி
சவத்துக்குநால்வரடி ஞானத்தங்கம்
ஜெகத்தின்வழக்கமடி. கஉஉ

உண்மையுரைக்கர்தே உலகத்தையேசாதே
தண்மைபெருக்காதடி ஞானத்தங்கம்
தப்பித்திரிவாயடி. கஉஉ

பொய்யரைச்சேராதே புலவரைசீராதே
செய்யாதகர்ரியத்தை ஞானத்தங்கம்
செய்யநினைக்காதடி. கஉச

அற்பரைச்சேராதே ஆளடியைச்சீராதே
சொற்பபிழைகட்கெல்லாம் ஞானத்தங்கம்
சீரிமுனியாதடி. கஉரு

தெய்வமிகழாதே தினரையேசாதே
பொய்மொழிபேசாதடி ஞானத்தங்கம்
பெருமோசமாகுமடி. கஉசு

கற்றதுகையளவு கல்லாதுலகளவென்
றுற்றுநினைப்பாயடி ஞானத்தங்கம்
உலகம்பலவிதண்டி. கஉஎ

கனிரசம்தேன்பாகு கற்கண்டுசேர்ந்தாப்போல்
முனிசாமிசொன்னதெல்லாம் ஞானத்தங்கம்
முதியோர்வெருக்காரடி. கஉஅ

மெஞ்ஞானத்தங்கம் முற்றிற்று.